# நெல் சந்தைப்படுத்தல் சபை - 2010

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 08 மாதங்களின் பின்பு 2011 ஒக்தோபர் 27 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்காமைகள்

பின்வரும் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கப்படவில்லை.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ)(i) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 290,664,124 கிரயமான காணி மற்றும் கட்டிடங்கள் என்பன ஒரு மீதியாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அக்கிரயத்தின் அடிப்படையில் ஆண்டிற்கு 2.5% படி பெறுமானத்தேய்வு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) பெறுமதி முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டதும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டதுமான ரூபா 24,513,343 தொகையான நிலையான சொத்துக்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த உபயோகமற்ற 03 மோட்டார் வாகனங்களின் கிரயப் பெறுமதிக்குப் பதிலாக ரூபா 1,725,000 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதி மோட்டார் வாகனக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை மீளாய்வாண்டின் போதிலும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 22,305,694 கிரயமான இயந்திரமும் உபகரணங்களும் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பனவற்றை நெல் சந்தைப்படுத்தல் சபை மீளச்செயற்படுத்தியிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் அதிகாரசபையிடமிருந்து கிடைத்த மோட்டார் வாகனம், அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் கணனி உபகரணங்கள், தளபாட உபகரணங்கள், ஏனைய உபகரணங்கள் மற்றும் மானிகள் போன்ற நிலையான சொத்துக்களின் ரூபா 19,770,605 பெறுமதியானது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரிசி ஆலை உரிமையாளர்களுடன் உடன்பட்டிருந்த அரிசி உற்பத்தி உடன்படிக்கையின் பிரகாரம் அரிசியை உற்பத்தி செய்து கையளிப்பதற்காக தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நெல் இருப்பில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கையளிக்கப்பட வேண்டிய மற்றும் அத்திகதியில் உள்ளவாறு காலாவதியான ரூபா 28,767,075 தொகையான அரிசி இருப்புக்களை கடன்பட்டோராக கணக்கு வைப்பதற்குப் பதிலாக அவ் அரிசி உற்பத்திக்காக வழங்கப்பட்ட நெல் இருப்பின் பெறுமதி வழியில் நின்ற நெல் இருப்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 526,751,777 தொகையான கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் போதியளவான அறவிடமுடியாக் கடன் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியினுள் திரண்டிருந்த ரூபா 3,020,249 தொகையான தீர்க்கப்படாதிருந்த கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி (டபிள்யூஎச்ரீ) மீதி காணப்பட்டது.

(ஆ) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மற்றும் உணவுத் திணைக்களம் என்பவற்றிற்கு விற்பனை செய்யப்பட்ட அரிசிக்காக கிடைக்க வேண்டிய முறையே ரூபா 72,566,049 மற்றும் ரூபா 10,591,838 தொகைகளாக ரூபா 83,157,887 கூட்டுத்தொகையான நிலுவை 1 தொடக்கம் 2 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் சிறுபோகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்களை போக்குவரத்துச் செய்வதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், இலங்கை சதொச கம்பனி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்பவற்றுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 20,000,000 கூட்டுத் தொகையான முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்டிருந்த போதிலும் முற்பணத்தைத் தீர்த்து செலவுகளில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிள் சிறு போகத்தின் போது நெல் கொள்வனவு செய்யும் செயற்பாடுகளுக்காக தொழிலாளர் கூலி, ஊழியர் படிகள் மற்றும் ஏனைய செலவினங்கள் என்பவைகளுக்காக இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 795,578 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவிடப்பட்டிருந்த போதிலும் முற்பணத்தைத் தீர்த்து செலவினங்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் உத்தியோகபூர்வ வீடு, சுற்றுலா விடுதிகள் மற்றும் 03 களஞ்சிய கட்டிடங்கள் என்பவைகளுக்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், கமநல அபிவிருத்தி ஆணையாளர், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் சபையின் வலய முகாமையாளர்கள் என்போருக்கு முறையே ரூபா 1,199,045 ரூபா 1,384,000 , ரூபா 294,232 மற்றும் ரூபா 360,450 தொகைகளாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,237,727 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவிடப்பட்டிருந்த போதிலும் முற்பணத்தைத் தீர்த்து செலவினங்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை மகாவலி அதிகார சபையின் ''சீ'' வலயத்தில் உத்தியோகத்தர்களினால் மீளாய்வாண்டின் பெரும்போகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பு ரூபா 103,381,776 தொகையாக இருந்த போதிலும் சபைக்கு ரூபா 102,946,494 தொகையான நெல் இருப்பு மாத்திரமே கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 435,292 தொகையான இருப்புக் குறைவினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்குச் சொந்தமான களஞ்சியம், நெல் ஆலைக் கட்டிடத் தொகுதி, அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் போன்ற 44 கட்டிடங்கள் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக வெளித்தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்றதுடன் அதற்காக வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. வாடகைக்கு வழங்கப்பட்ட மேலும் 19 கட்டிடங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டியிருந்த வாடகை ரூபா 5,143,995 ஆக இருந்தது.

(ஏ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த கணக்குகள் முன்கொண்டுவரப்பட்டிருந்த கீழே காண்பிக்கப்படுகின்ற கணக்கு விடயங்களை அறவிட்டு அல்லது தீர்த்து வைக்கப்பட்டு கணக்குகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பொருளாதார ரீதியற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.